# விடுகதைகள் — பழமையும் சிறப்பும்

முனைவர் செ. வசந்தகுமார்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
ஆத்தூர்

இலக்கியம் மனிதனை நேரடியாக இதயத்தோடு பிணைத்து வைக்கும் இயல்புடையது; சமூகத்தின் தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையையும் பண்பாட்டையும் வளர்ப்பது; இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது. ஒவ்வொரு மொழியிலும் பல்வேறு இலக்கியங்கள் உள்ளன. அதில் வாய்மொழியாக வழங்கப்பட்ட விடுகதைகள் நூலாகவும் ஆராயும் அளவிற்கு சிறப்புடையதாக அமைந்துள்ளன.

**மொழியும் விடுகதையும்**

விடுகதைகள் தமிழக நாட்டுப்புற மக்களிடையே புதிர்மைப் பண்பும், கதைப் பண்பும் ஒருங்கே அமைந்த இலக்கியமாக உள்ளன. விடுகதைகள் காலப்பழமை கொண்டவையாகும். விடுகதைகள் தொல்காப்பியருக்கு முந்தைய காலத்திலிருந்தே வாய்மொழியாக வழங்கி வந்துள்ளன. நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் காலத்தால் முந்தியதும் அறிவு புகட்டுவதும், சிந்திக்கத் தூண்டுவது மூத்தோர் இளையோருக்கு அறிவு புகட்டும் வழியில் அவை ஒன்றாகத் தோற்றம் பெற்றன எனலாம். குழந்தைகளின் சிந்தனையைத் துண்டுவதற்கான தூண்டுகோளாகவும் உள்ளன. மக்களின் அறிவை வளர்க்கவும், அக உணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கிலும் விடுகதைகள் அமைந்துள்ளன.

விடுகதைகளில் உள்ள சொற்செறிவு, சுருங்கிய வடிவம் மக்களின் மனங்களை எளிதில் கவர்கின்றன. பழமையான மொழிகளான தமிழ், வடமொழி, கிரேக்கம் ஆகியவற்றிலும், விவிலிய நூலிலும், நாட்டார் கதைகளிலும், பழமரபுக் கதைகளிலும், எழுத்திலக்கியங்களிலும் விடுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன. இக்காலத்தில் மக்களிடம் விடுகதைகளின் பயன்பாடு குறைந்துள்ளது.

**விடுகதையின் வேறுபெயர்கள்**

விடுகதையைத் தொல்காப்பியர் பிசி என்று கூறுகிறார். பிதிர், புதிர், அழிப்பான் கதை, வெடி, நொடி, வெடிபோடுதல் என்று பல்வேறு சொற்கள் விடுகதையைக் குறிக்க தமிழகத்தின் பல்வேறு பகுதி மக்களால் பயன்படுத்தப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தார் விடுகதையை அழிப்பாங்கதை என்பர். ஒருவர் விடுகதையைப் போட மற்றவர் அதனை விடுவித்துவிட்டால் அவர் விடுகதையை அழித்துவிட்டார் என்பது பொருள். அதனால் அது அழிப்பாங்கதை எனப்படுகிறது.

பிசி என்ற சொல்லே பின்னாளில் பிதிர் என்றும் பின்னர் புதிர் என்று மாற்றம் பெற்றிருக்க வேண்டும். கிராம மக்களின் அன்றாடப் பேச்சில் என்ன புதிர் போடுகிறாய் எனக் கூறுவதைக் கேட்கிறோம். மிகக்குறுகிய காலத்தில் கூறத்தக்கவாறு சுருங்கிய அமைப்புடையது என்பதால் நொடி என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது. திருச்சி, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ‘வெடி’ என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

தொல்காப்பியர் செய்யுளியலில் பிசி என்ற சொல்லால் விடுகதையைக் குறிப்பிட்டு அதன் இயல்புகளைக் கூறியுள்ளார்.

“ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே”

உவமையாக வருவனவற்றைக் கூறிப் பொருளை மறைமுகமாகக் காட்டுவதும், தெளிவுபட வருவதும் என்கிறார் தொல்காப்பியர்.

**விடுகதை உருவாக்கும் முறை**

அருஞ்சொல், உருவகம் ஆகிய சொற்களையும், பேச்சு நடையில் வேறுபட்டு வழங்கும் கவிதைச் சொற்களையும் அமைப்பதால் நடை மிகவும் சிறப்புற்று விளங்கும் தன்மையுடையது. முற்றிலும் இதே வகையான கவிதைச் சொற்களையே பயன்படுத்தும் மொழிநடை விடுகதையாகவோ அல்லது அயல்மொழியாகவோ அமைந்துவிடும். அதாவது வெறும் உருவகமாகவே அமைந்தால் விடுகதையாகிவிடும், திசைச்சொற்களாகவே அமைந்தால் அயல்மொழியாகி விடும். கருதிய ஒரு பொருளைச் செயற்கையான சொல்லமைப்பால் கூறுவது புதிரின் இன்றியமையாத் தன்மையாகும். வழக்குச் சொற்களால் இத்தகைய சொல்லமைப்பைப் படைக்க முடியாது. உருவகங்களையே வைத்து அடுக்குவதனால் மட்டுமே இத்தகைய புதிர்களை அமைக்க இயலும்.

**விடுகதையின் சிறப்பியல்பு**

ஒரு பொருளின் பெயரை மனத்தில் வைத்துக்கொண்டு அதன் குணங்களை வரிசையாகச் சொல்லி அப்பொருளின் பெயர் எது? என்பதே புதிர் அல்லது விடுகதையாகும். குணங்களைக் கூறும்போது வெளிப்படையாகக் கூறாமல் மறைபொருளாகக் கூறுதல் சிறப்புடைய புதிராகும். மறைபொருளாகக் கூறுவதாவது வேறு உவமானப் பொருள்களைக் கூறி அவைகளினால் அப்பொருளின் குணங்களை அறியச்செய்து, விடை தேடச் செய்வது என்று கோவைக்கிழார் குறிப்பிடுகிறார்.

**விடுகதைக்கானச் சூழல்களும் மரபும்**

விடுகதை போடும் பழக்கம் உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடம் காணப்படுகிறது. விடுகதை போடும் சூழ்நிலைகள் பல உள்ளன. விடுகதை போடும் காலம், இடம், விடுகதை போடுதலில் கலந்து கொள்ளுதற்குரியோர் பற்றிய பல்வேறு கருத்தாக்கங்கள் போன்றவை பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகின்றன.

சடங்குகளின் ஒரு பகுதியாக விடுகதைகள் அமைகின்றன. குறிப்பிட்டுச் சொன்னால் தீட்சைச் (Initiation) சடங்கிலும், சாவுச் சடங்கிலும் விடுகதை போடுதல் ஒரு பகுதியாக அமைகிறது. ஒரு வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால் விழித்திருந்து இரவைக் கழிப்பதற்காக விடுகதைகள் போடும் வழக்கம் அன்றைய காலத்தில் இருந்துள்ளது.

பொதுவாகச் சொன்னால் சடங்கின்போது போடப்பட்ட விடுகதைகள் உண்மையான விடுகதைகள் அல்ல. ஆனால் இருண்மையான வினாக்களின் வடிவில் அவற்றை அமைத்துக் கூறியுள்ளனர். மாறாகச் சாவுச்சடங்கில் இரவு விழிப்பின்போது போடப்பட்ட கதைகள் உண்மையான புதிர்களாக இருந்திருக்கின்றன. இத்தகு வேறுபாட்டிற்குக் காரணம் யாது? சடங்கின்போது விடுகதை போடுதல் அல்லது வினாக்களை எழுப்புதல் முக்கியமான ஒரு தேர்வாகச் சடங்கின் முக்கியமான ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. ஈமச்சடங்கின் இரவு விழிப்பின்போது பொழுதைப் போக்குவதற்குரிய ஒரு வழியாக விடுகதைகள் போடுதல் இருந்துள்ளது.

பரிணாமவாதிகளும் சடங்கியலர்களும் சடங்குகளுடன் தொடர்புடைய விடுகதைகளைக் கண்டுபிடித்தனர். அதனால் விடுகதைகள் சடங்குகளின்போது தோற்றம் பெற்றன என்று கோட்பாடுகளை உருவாக்கினர். தொமோரி (Tomori) என்போர் இந்தோனேசிய மக்களுள் ஒரு வகையினர். இவர்கள் வயலில் அறுவடை செய்யும்போது சாதாரணப் பேச்சு மொழியிலிருந்து மாறுபட்ட சிறப்புச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். ஏன் அவ்வாறு பயன்படுத்துகின்றனர்? என்றால் அவர்கள் நெல்லிற்கு ஆன்மா இருப்பதாகக் கருதுகின்றனர். ஆதலின் நெல்லின் எதிர்கால விதி குறித்து அதற்குத் தெரிவித்து அதன் ஆன்மாவை அச்சுறுத்தி விடக்கூடாது என்று இவ்வாறு சிறப்புச் சொற்களைப் பேசுகின்றனர். அறுவடையின் போது தொமோரி மக்கள் விடுகதை போடுவதற்கும் இதுவே காரணமாக இருந்துள்ளது.

மத்திய செலிபஸ் (Central Celebas) பகுதியில் போசோ (Poso) என்னுமிடத்திலுள்ள ஆல்ஃபுளோர்ஸ் அல்லது தொரட்ஜாஸ் (Alfloors of Toradijas) மக்கள் பயிர்களைக் காவல் செய்யும்போது விடுகதைகள் போடுகின்றனர்; கதைகளை எடுத்துரைக்கின்றனர். அவருள் எவரேனும் ஒருவர் விடுகதையின் விடையைக் கண்டு பிடித்தவுடன் அந்தக்குழுவினர் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் “பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் நம்முடைய நெற்பயிர் வளரட்டும், செழிப்பான கதிர்கள் வெளிவரட்டும்” என்று கூவுகின்றனர். ஆனால் அறுவடையின்போதும், புதிய வயல்களை உருவாக்கும்போதும் விடுகதைகள் போடுவதும் கதைகளை எடுத்துரைப்பதும் தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு விடுகதைகள் போடுதல் ஏதோ சில காரணங்களினால்

இம்மக்களிடையே ஒருவகை மந்திரமாகக் கருதப்படுகின்றது. இந்த மந்திரங்கள் பயிர்களை வளர்க்க அல்லது அழிக்கச் செய்யும் ஆற்றல் கொண்டவை என்று அவர்கள் நம்புகின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் விம்போபோ ஆற்றுச் சமவெளிகளில் பாதோங்கா என்ற பண்பாட்டு இன மக்கள் வாழ்கின்றனர். மழையின்றி வறட்சி ஏற்பட்டால் அதற்குக் காரணம் பெண்கள் கருச்சிதைந்ததை மறைத்து விட்டதுதான் காரணம் என்று இவர்கள் கூறுகின்றனர். இத்தீட்டைப் போக்கி மழையை வருவிப்பதற்காக ஒரு சடங்கினைச் செய்கின்றனர். காட்டில் ஓரிடத்தைச் சுத்தப்படுத்தி அவ்விடத்தில் ஒரு பானையின் வாய், வெளியே தெரியுமாறு புதைத்துவிடுகின்றனர். அதன் நான்கு திசைகளிலும் சிலுவையின் அமைப்பில் நான்கு கால்வாய்கள் அமைக்கப்படுகின்றன. பின்னர் ஒரு புள்ளியளவுகூட வெள்ளை நிறம் இல்லாத ஆடு அல்லது மாடு கொல்லப்படுகின்றது. அதன் வயிற்றிலுள்ள அரைகுறையாகச் சீரணமான புல்லை எடுத்துப் பானையை நிரப்புவர். அடுத்துக் கள்ளங்கபடமறியாய் பேதைப் பருவத்துச் சிறுபெண் தண்ணீர் எடுத்து வந்து அந்தப்பானையை நிறைத்து நாலாபுறங்களிலும் தண்ணீர் வழிந்தோடுமாறு ஊற்றுவாள். அதன் பின்னர் பெண்டிர் கூடித் தம் ஆடைகளைக் களைந்துவிட்டு ஒரு சிறுகொத்துப்புல்லை மட்டும் தம் நிர்வாணத்தை மறைக்க இடையில் கட்டிக்கொண்டு மழையே வா! மழையே வா! என்று குதித்துப் பாடுவர்.

பின்னர் மலைக்குச் சென்று குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளும், இரட்டைக் குழந்தைகளும் புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டி அவற்றின் எச்சங்களை ஓரிடத்தில் சேர்க்கின்றனர். அந்த நேரத்தில் அவ்விடத்திற்கு எந்த ஆண்களும் வரக்கூடாது. விடுகதைகள் போடுவர். அப்போது மிகவும் ஆபாசமான மொழிகளில் அதாவது சுன்னத்து கல்யாணத்தின்போது பயன்படுத்தப்படும் சொற்களைக்கொண்டு விடையிறுக்க வேண்டும். இந்த ஆபாசமான வார்த்தைகள் சாதாரண வாழ்வில் தடை செய்யப்பட்டவை. இச்சந்தர்ப்பத்தில் அவை வழக்கமானவையாகவும் விதிக்குட்பட்டவையாகவும் கருதப்படும். பின்னர் வறட்சிக்குக் காரணமான அக்கல்லறைகளின் மீது நீர் ஊற்றித் தணித்த பின்னர் அவ்வெச்சங்களை மீண்டும் புதைத்து விடுகின்றனர் என்று ஃபிரேசர் குறிப்பிடுகின்றார்.

விடுகதை போடும் இடங்களில் ஒன்று திருமண நிகழ்விடமாகும். சில பண்பாடுகளின் மணப்பெண்ணும் மணமகனும் ஒருவருக்கொருவர் விடுகதை போட்டுக் கொள்வர்.

சில மரபுகளில் திருமண ஏற்பாடுகள் நடைபெறும்போது மணமக்களின் பெற்றோர் போடும் விடுகதைகளை மணமகன் விடுவிக்க வேண்டியவனாகின்றான். நாட்டார் கதைகளிலும் நாட்டார் பாடல்களிலும் மணமகன் விடுகதைகளை விடுவிப்பதாக முன்னர் இப்பழக்கம் இருந்ததற்குச் சான்றாக உள்ளதையும் இன்றைய திரைப்படங்களில் இதுபோல காட்சிகள் பாடல்களாக அமைவதையும் காணலாம்.

கல்வித்துறையில் மாணவரின் அறிவைச் சோதிப்பதற்காக ஆசிரியர் விடுகதை போடுவதும், கல்வியறிவை ஊட்டும் நோக்கில் பெற்றோர்கள் விடுகதைகள் சொல்வதும்

முந்தைய வழக்கத்தில் இருந்துள்ளன. இருவர் சந்திக்கும்போது முகமன் கூறும் முறையில் விடுகதை போட்டுக்கொள்ளும் பழக்கத்தை ஆனாங் (Anang) மக்களிடையில் இருப்பதாக ஜான்.சி.மெகஞ்சரும், எஃபிக் மக்களிடையில் இருப்பதாக சி.சிம்மன்ஸ்வும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு கூறப்படும் விடுகதைகள், சந்தித்துக்கொள்ளும் இருவரிடையிலும் ஏற்கனவே அறிமுகம் உண்டு என்பதைக் காட்டுவதாக உள்ளன. அப்போது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்ட வேண்டும் என்ற நோக்கில் புதிர்வடிவில், அறைகூவலாக, விடுகதைகள் போடப்படுவதில்லை. மாறாக அடையாளம் காணும் நோக்கில் விடுகதை போடப்படுகிறது.

விடுகதை இலக்கிய வகையினுள் இணைக்கப்பட்ட வடிவியலாகவும் அமைந்துள்ளது. குறிப்பிட்டுச் சொன்னால் அவை சில கதைகளில் கதைத்தலைவன் விடுகதையை விடுவித்துத் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்து தப்பி விடுகிறான். விக்கிரமாதித்யன் கதையில் வேதாளம்போடும் விடுகதைகளை அவன் விடுவிக்காவிட்டால் அவன் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் என்பது தண்டனை. இவ்விடுகதைகளை ஆங்கிலத்தில் (Neck Riddle) என்பர். தமிழில் தலைப்போகிற விடுகதைகள் என்பர்.

விடுகதை போடும் சூழல் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஆனால் இச்சூழல் சிக்கல் மிக்க ஒன்றாகும். பெரும்பான்மையான விடுகதை ஆய்வுகள் ஓய்வு நேரத்தில் பொழுதுபோக்காக விடுகதை போடும் சூழல்களைப் பற்றியனவாக அமைகின்றன. இச்சூழலில் விடுகதை போடுவதன் பயன்பாடு மகிழ்வுறுத்தலேயாகும். பொழுதுபோக்காக விடுகதை போடும் சூழலை எடுத்துக்கொண்டால் எந்த நேரத்தில் விடுகதை போடலாம் என்ற விதிகளில்கூட வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான சமூக மரபுகளில் உற்பத்தி, உழைப்பு இல்லாத காலத்திலேயே விடுகதைகள் போடப்படுகின்றன.

வேலையற்ற காலங்களில் இரவு உணவுக்கு பின் அக்கம்பக்கத்தார் கூடி விடுகதை போடுதல் உலகெங்கிலும் காணப்படும் பழக்கமாகும். பொழுதுபோக்கு விடுகதைகளைப் பொருத்தவரை யாரேனும் ஒருவருடைய வீட்டில் கூடிச் சமூகவயமான செய்திகளைப் பேசும்போது விடுகதை போடத் தொடங்கலாம். இரவில் ஆடுமாடுகளின் கிடை காக்கும் போதும் சமூகச்சார்பாகக் கூடும் இடங்களிலும் விடுகதை போடலாம். விடுகதை போடுபவர் விடுவிப்பவர், பார்வையாளர் என்போர் இச்செயலில் ஈடுபடுவோராவர். ஒரு குழுவினர் மற்றொரு குழுவினர்க்குப் பார்வையாளராகவும் அமைகின்றனர்.

**விடுகதையின் பயன்கள்**

நாட்டார் இலக்கிய வகைகளான பயன்பாட்டிலக்கியங்களுள் விடுகதையும் ஒன்று. பல்வேறு பண்பாடுகளிலும் விடுகதையின் பயன்பாடுகள் குறித்து நாட்டார் வழக்காற்றியலரும் மானிடவியலாரும் எழுதிச் சென்றுள்ளனர்.

அடையாளங்காணும் அறிவுத்திறத்தையும், பல்வேறு மக்களின் சூழ்நிலை பற்றிய அக்கறையினையும் விடுகதைகள் பிரதிபலிக்கின்றன. சிந்தனைக்குப் பயிற்சி நல்கும் கருவியாக அமைகின்றன. ஒரு சமூகத்தின் பண்பாட்டு மதிப்புகளையும் அதன் இயல்புகளையும் அச்சமூக மக்களிடையே ஊட்டுவதற்கும் பரப்புவதற்கும் தலைமை

தாங்கி நடத்துவதற்கும் பணிந்து நடத்தல் பற்றிய விதிகளைக் கற்றுக்கொடுப்பதற்கும் விடுகதைகள் பயன்படுகின்றன. மனிதன் தன் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் தீவிரமான உணர்வுகளையும், பாலுணர்வுகயையும் வெளிப்படுத்தும் வாய்மொழி வடிகால்களாக விடுகதைகள் செயல்படுகின்றன. அடையாளங்காணும் திறனுக்கு மறுபயிற்சியாகவும் கருத்தாக்கக் குழப்பங்களைத் தெளிவுபடுத்தும் கருவியாகவும் விடுகதைகள் செயல்படுகின்றன. விடுகதைகள் குழுவினரிடையே ஒருமைப்பாட்டையும் இணைவையும் ஏற்படுத்துகின்றன. விடுகதையின் இன்றியமையாதப் பயன்பாடு களிப்பூட்டுவதாகும். இது மக்களால் நேரடியாக உணரப்படுவது. நிலவியல் பெயர்கள் அல்லது வரலாற்றுச் சம்பவங்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் விடுகதைகள் அறிவுறுத்துவனவாகவே உள்ளன. அவை கூர்மையாகக் கவனிக்கும் ஆற்றலை வளர்க்கின்றன.

விரிந்த நோக்கிலும், உளவியல் நோக்கிலும் பார்த்தால் விடுகதைகள் இரண்டு வகையான பயன்பாடுகள் உடையன. பல்வேறு பொருட்களுக்கிடையே சிறப்பாக ஒன்றுக்கொன்று மாறான ஒப்பிட முடியாதவற்றிற்கிடையே ஒப்புமை காண்பதில் மனிதன் பெருமையடைகிறான். மயக்கத்தைத் தீர்த்துத் தன்னால் அடையாளம்கண்டு கொள்ளமுடியும் என்ற முறையில் மனிதன் திருப்தியடைகிறான். விடுகதை போடுபவர், விடுவிப்பவர், பார்வையாளர் போன்றோரின் தன்முனைப்பை வளர்க்கின்றது. விடுகதையால் கூறுபவனின் உளப்பான்மை வளர்கிறது.

**பயன்பாட்டு நூல்கள்**

1. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம்.
2. இராமநாதன். அரு. நாட்டுப்புறப்பாடல் திறனாய்வு.
3. சண்முகசுந்தரம்.சு. தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்.
4. பெருமாள்.வ. பழமொழியின் பொருளும் வரையறையும்.
5. டாக்டர்சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு.
6. தொல்காப்பியம்.
7. சுப்ரமணியம்.ச.வே., தமிழில் விடுகதைககள், ஆய்வுரை.
8. கோவைக்கிழார், எங்கள் நாட்டுப்புறம்.
9. ராமலிங்கம்.மு. களவுக்காதலர் கையாண்ட விடுகதைகள்.
10. ரோஜாமுத்தையா, விடுகதைக்களஞ்சியம்.
11. சங்கர் சென்குப்தா, நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சி.